1155

11.55
1.57

OFFICE OF THE REGISTRAR OF B...
7 - MAR 1957
MADRAS



முல்லைக்கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர்: இளவழகனார்

கிளை	துன்முகி, மாசி 4வ.	தளிர்
9	22—2—57	19

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளிநாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0
ஆயுள் - கையொப்பம்	ரூ.	100 0 0

முகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ்நாடு.

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

பொன் போன்றார்

குணசாலிகளை, மக்கள். தங்கமானவர் என்று பாராட்டுவது வழக்கமாயிருக்கிறது. தங்கம் மதிப்புடையது; காரணம் களிம் பற்றது; நயமும் ஒளியும் உடையது. அப்படியே மக்களில் அழுக்கற்றவராய் இனிமையும் உண்மையும் உடையவராய்த் திகழ்வோர், மதிக்கப்படுகின்றனர்; பொன்போற் பொதிந்து போற்றப்படுகின்றனர்!

மக்களில் அழுக்கற்றவர் என்றால், அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் முதலிய மாசுகள் குறைந்தவர்; அத்தகையோர், அடக்கமும் பொறுமையும் முதலிய நன்னலங்கள் வாய்ந்தவரா கவே இருப்பர்; சால்புடையோர் அல்லது சான்றோர் என்று அவ ரைப் புகழ்கின்றோம்.

அழுக்கற்றுப், பிறர்க்குப் பயன்படும் நயமும் அதனாற் சான் றாண்மை ஒளியும் உடையோர், பிறரைத் துன்புறுத்தல் கருதார்; தம்மைத் துன்புறுத்தினாலும், தாம் அடையும் துன்பம் தம்மால் அவர் அடைதலை விரும்பார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு என்று, சால்பின் பயன் இன்னது என ஆசிரியர் வேறோரிடத்தில் எடுத்துக் காட்டு தலும் இங்கே கருத்தூன்றுதற் குரியது. எந்நிலையிலும் இனிய செய்யும் பெருந்தன்மையே உயர்ந்து நிறைந்த உள்ளத்தின் இயல்பாதல், இதனினின்று துணிந்து கொள்ளலாம்.

மிகை செய்வாரும் அதற்கு ஒறுப்பாரும் ஏறக்குறைய ஒத்த உள்ளத்தவரே. குற்றத்தை முதலில் செய்தார், அடுத்துச் செய் தார் என்னும் அளவே, இவர்க்குள் வேற்றுமை, மற்று இருபக் கத்தாரும் குற்றம் செய்தார் என்பதில் வேற்றுமை, இல்லையே! ஆதலால், ஒறுத்தாரை மிகை செய்தாரினும் வேறாக வைத்து மதிக்க இடமேது! உலகத்தில் நற்பண்புகளும் கண்ணியமும் வளர்வதற்குத்தான் இடமேது!

— இ. அ.

ஒறுத்தாரை ஒன்றாக
வையாரே, வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற்
[பொதிந்து

ஒறுத்தாரை ஒன்றாக வையார் – மிகை செய்தவரிடத் துப் பொறுமை கொள்ளாமல் உடனே தண்டனை செய்வா ரைத் தக்கோர் ஒரு பொரு ளாக உட்கொள்ளார், வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து – ஆனால், அப்போது பொறுத்து அவர் மனமாற்றத் துக்கு முயல்வோரைப் பொன் போற் காத்து மதித்துக் கொள் வர்.

ஏகாரம் இரக்கமும் பயந்தது.

பொன்போல் என்றார் நாட் டுக்கு அத்தகையோர் சொத்தா வர் என்றற்கு. மதிப்பும் விருப் பமும் அவரிடத்து அனைவரும் கொள்வர் என்பது கருத்து. ஏளனம் ஆகுமே என்று கருது வார்க்கு இது மறுப்பும் ஆம்.

பொதிந்து, இங்கே காத்து என்னும் பொருட்டு, கவனித் துக் கருத்திருத்திக் கொள்வர் என்பது.

ஒறுப்பவர் உள்ளத்தில் வெகுளி முதலிய அழுக்குகளும் பொறுப்பவர் உள்ளத்தில் பெருமை முதலிய நலன்களும் பெருகிவருவதால் ஆசிரியர் இவ் வாறு கூறினார்.

கற்றார் கல்லார் கலையோர் தொழிலர் உற்றார் உறவும் ஒருங்கே வம்மின்!

'என் கடன் பணிசெய்து கிடப்பதே''

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
—புறநானூறு.

முல்லைக் கொடி

கிளை 9	துன்முகி, மாசி 22-2-57	தளிர் 19

நூல் நிலையங்கள்

கல்வின் தரம் விருப்பத்தக்க நிலையில் இல்லை. ஆழ்ந்த நல்லறிவும் ஆய்ந்துணர் பண்பும் நாட்டில் எங்கோ சிலரிடந்தான் தலை காட்டுகின்றன. அவர்க்கும் முன்னைய பிறவித் தொடர்பாகவே அத்தகைய அறிவு மாட்சிமை வாய்ந்திருக்க வேண்டும்.

ஆற்றோரங்களிலும், அருவிக் கரையிலும், தண்ணறுஞ்சோலைகளிலும், தவந்தவழ் சாலைகளிலும் அன்று நடந்த குருகுல முறைக்கல்வியின் செழும் பண்பில் ஆயிரத்தில் ஒரு கூறும் இன்றைய நாட்டுக் கல்வியில் காணும் பேறு நமக்கு வாய்க்கவில்லை.

பள்ளிப்படிப்பு இந்த நிலைக்கு வந்து விட்டது. நாட்டில் விழிப்புணர்ச்சி தோன்றி கல்வியைப் பழைய தரத்துக்குக் கொணர அறிஞர்கள் அரும்பாடுபடுகின்றனர். பாட்டுக்குத் தகுந்த பலன் திருவருட்டுணையால் எதிர்காலத்திற் பெறக் கூடும் என்ற நம்பிக்கையும் துளிர்விடுகின்றது.

குறைந்த கல்வியின் தரத்தை உயர்த்தப் பள்ளிகளும் கல்லூரிகளும் முயன்றால் மட்டும் போதாது. வேறுபல வகைகளில் உயர்த்தலாம். அவைகளில் தலை சிறந்தது நூல்நிலையக் கல்வி.

நூல் நிலையங்கள் நாட்டில் கல்வியின் தரத்தை உயர்த்தி விடும் என்று உறுதியாக நம்பலாம் என்று அறிஞர்கள், தம் அநுபவ அறிவால் ஆய்ந்துரைக்கின்றனர்.

மேலை நாடுகளில் நல்ல நூல் நிலையங்கள் நாட்டுக் கல்வி வளர்ச்சிப் பொறுப்பில் பெரும் பகுதியை வகிக்கின்றன. நம் நாட்டிலும் அந்நிலை காண வேண்டும்.

இப்போதும், நாட்டில் எங்கு பார்த்தாலும் நூல் நிலையங்கள் இல்லாமல் இல்லை. அண்மைக் காலத்தில் தமிழகத்தில் பல ஊர்களில் அரசினர் முயற்சியினால் நூல் நிலையங்கள் அமைக்கப் பெற்று நடைபெறுவதும் நாம் அறிந்ததே. ஆனால் மேலை நாடுகளிற்போலக் கல்வி வளர்ச்சிக்கு அவை எத்துணையளவுக்கு உதவுகின்றன என்பதுதான் விளங்கவில்லை.

கண்டது கற்கப் பண்டிதனாகிவிட முடியாது. கற்பதில் ஓர் ஒழுக்கு முறை வேண்டும். 'இன்னது கற்றான் இன்னது கற்க!' என்றெல்லாம் பழைய காலத்தில் தமிழ் நூல்கள் ஆணையிட்டன. அத்தகைய திட்டங்களும் ஒழுங்குமுறைகளும் இந்நாட்களில் இல்லாமற் போனாலும், மக்கள் அறிவு, மாட்சிமை யடையக் கூடிய நல்லநூல்களாக நூல் நிலையங்களில் இடம் பெறுவது எவ்வளவு முதன்மை! இன்றைய சூழ்நிலையில் கல்வி வளர்ச்சியின் பெரும்பகுதி அந் நிலையங்களின் பொறுப்பாகவன்றோ ஆகிவிட்டது!

இயல்பாக உள்ள நல்ல அறிவை மேலும் வளர்த்து உயர்ந்த நிலைக்குக் கொணரவும் திரம்பிச் செல்லும் அறிவைத் திருத்திச் செந்நெறியில் நிறுத்தவும் தகுந்த அறிவு நூல்களாக நூல் நிலையங்களில் இடம் பெற வேண்டும். வழுக்கு நிலத்தில் ஊன்றுகோல் போல உதவும் நல்லறிவாளர் கருத்துச் செல்வங்கள் நிறைந்த கருவூலங்களாக நிலையங்கள் திகழவேண்டும். நாட்டுப் பற்றை வளர்க்கும் ஆராய்ச்சிகள் வரலாற்றின் அடிப்படையில் எழுப்பிய புதுக்கதைகள், இலக்கிய ஆராய்ச்சிகள், விமர்சனங்கள் மொழிச்சுவை குன்றா நாடகங்கள், மொழியிலக்கண ஆராய்ச்சிகள் கவிதையின்பங்கள் போன்ற நூல்கள் பெருவாரியாக நூல் நிலையங்களில் இடம் பெற வேண்டும்.

மேனாட்டறிஞர் பெருமக்களான, டிக்கன்ஸ் கோல்டுஸ்மித்து, மேக்காலே போன்ற நல்லறிஞர் நூல்களும் நிலையங்களில் இடம் பெறுதல் முதன்மை

விலை குறைவாகவும் எண்ணிக்கை அதிகமாகவும் வாங்கி நிறைக்க முடிகிறது என்று காலத்துக்குதவாக் கற்பனைக் கதைகளை வாங்கி அடுக்குவது நூல் நிலையத்தின் பெருக்கு இழுக்கு தருவதாகும். மக்களின் உணர்ச்சிகளை, அதிலும் இளமாணவர்களின் முற்றாக் கருத்துக்களைத் தீயவழிகளில் ஈர்த்துச் செலுத்தும் வகையில்

(7-ம் பக்கம் பார்க்க)

கலைப் பகுதி — உள வலிமைக்கு

முன் தொடர்ச்சி

தில்லைத் திருக்கோயிலின் தொன்மையும் வளர்ச்சியும்.

(தேவராஜ விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக வெளியீட்டிற் கண்டது)

முதல் இராசராச சோழன் [கி. பி. 985 – 1014] நம்பியாண்டார் நம்பியின் துணை கொண்டு தில்லைத் திருக்கோயிலில் தேவாரத் திருமுறைகளைக் கண்டெடுத்து ஏழு திருமுறைகளாக முறைப்படுத்தித் திருவெருக்கத்தம் புலியூரிலுள்ள பாடினியாரைக் கொண்டு இசை வகுத்தான் என்ற செய்தி பரம்பரையாக வழங்கி வருதலை நோக்குங்கால், இவ்வேந்தன். தில்லைத் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்திருத்தல் வேண்டும் என எண்ண வேண்டியுளது.

இவ்வேந்தனது புதல்வனாகிய கங்கை கொண்ட சோழன் மனைவியார் நக்கன் பரவையார் சிதம்பரத்தில் திருவானித் திருநாளுக்கும், மார்கழித் திருவாதிரைத் திருநாளுக்கும் மாசித் திருநாளில் திருத்தொண்டத் தொகை பாடுவதற்கும், திருவிழாக்களுக்கு வரும் ஆயிரம் சிவனடியார்களுக்கு உணவளிப்பதற்கும் ஆண்டொன்றுக்கு 2250–கல நெல் மேல் வாரமாக வருதற்குரிய 44–வேலி நிலத்தையும் 30–பொற்காசுகளையும் கி. பி. 1036-ல் நிபந்தமாக வழங்கியுள்ளார்.

கங்கை கொண்ட சோழன் புதல்வனாகிய வீரராஜேந்திர சோழன் (கி. பி. 1063–1070) தில்லையம்பலவாணர் திருமுடியில் அணிதற்குத் திரைலோக்கிய சாரம் என்ற கிடைத்தற்கரிய நன்மணியை அணிவித்துள்ளான் என்ற செய்தி சாரலா செப்பேட்டிலும் (EP IND VOL XXV–25) கன்னியாகுமரிக் கல்வெட்டிலும் திருவாங்கூர் (தொகுதி-3 34–ஆம் கல்வெட்டு) கல்வெட்டிலும் காணப்படுகிறது.

முதற்குலோத்துங்கன் (கி. பி. 1070–1120) சயாம் தேயத்துக்குக் கிழக்கேயுள்ளதும் கம்போடியா என வழங்குவதுமாகிய காம்போஜி நாட்டிற்குச் சென்ற பொழுது அந்த நாட்டு வேந்தன் கையுறையாகத் தந்த ஒளி திகழ் கல்லொன்றைக் கொண்டுவந்து தில்லைச் சிற்றம்பலத்தைச் சார்ந்த எதிரம்பலத்திலே வைத்தனன் என்று சிதம்பரம் கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளது. (EP. IND VOL V. No. 130) இவ்வேந்தனுடைய அரசியலதிகாரிகளுள் ஒருவனாகிய மழலை நாட்டுவேள் கண்டன் மாதவன் என்பான் தில்லையம்பலத்தின் வடகீழ்த்திசையில் சொன்னவாறறிவாராகிய சேரமான் பெருமான் நாயனார்க்கு ஒரு தனிக்கோயிலும் புராணநூல் விரித்துரைக்கும் பெரிய மண்டபமும் அமைத்தான் என்று நீடூரிலுள்ள கல்வெட்டொன்றிற் குறிக்கப் பெற்றுள்ளது (EP. IND. VOL. ZVIII. No. 8)

முதற் குலோத்துங்கன் புதல்வனாகிய விக்கிரம சோழன் (கி பி. 1118–1136) தன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் பிற மன்னர்கள் அளித்த திறைப் பொருளைக் கொண்டு தில்லையம்பதியில் அம்பலவாணர் கோயிலுக்குப் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளான் என்று அவனது மெய்க்கீர்த்தி கூறுகின்றது. எனவே கி. பி. 1128 - ல்தான் தில்லைப் பெருங்கோயில் இப்பொழுதுள்ள நிலையில் விரிவாக அமைதற்குரிய திருப்பணிகள் தொடங்கப்பெற்றன எனத் தெரிகிறது. இவ்வேந்தன் தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழவுள்ள திருச்சுற்று மாளிகையை அமைத்துக் கோபுரத்தைப் பொன் வேய்ந்தான் (INS NO 282, 284, 287, 293, OF 1913) விக்கிரம சோழன் திருச்சுற்று மாளிகை எனக் கல்வெட்டுக்களிற் குறிக்கப்படுவது முதற் பிரகாரத்தைச் சூழ்ந்துள்ள திருமாளிகையே யாகும். இவ்வேந்தன் மாசிக் கடலாட்டுக்கு அம்பலவாணர் எழுந்தருளுவதற்கெனச் சிதம்பரத்திலிருந்து கடற்கரை வரையில் நிழல்தரும் பெருவழியொன்றை அமைத்துள்ளான். இப் பெருவழி விக்கிரமசோழன் தெங்குத் திருவீதி [INS 312 to 1913] என அந்நாளில் வழங்கியுள்ளது. சிவகங்கையின் மேற்குக் கரையிலுள்ள நூற்றுக் கால் மண்டபம் இவ்வேந்தனாற் கட்டப்பட்டதே யாகும். இம் மண்டபத்தின் தூண்களில் விக்கிரம சோழன் திருமண்டபம்' எனக் குறிக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

இவனுடைய படைத்தலைவனும் அமைச்சனுமாகிய மணவிக் கூத்தன் காலிங்கராயன் என்பான் தில்லைப் பெருங்கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் பலவாகும். மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைச் செப்பேட்டில் எழுதித் தில்லைக் கோயிலில் சேமித்து வைத்தமையும் திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குத் தனிக் கோயில் அமைத்துப் பொன் வேய்ந்தமையும் சிவகாமக் கோட்டம் எழுப்பித்தமையும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாம்.

[தொடரும்]

மொழிப் பகுதி – அறிவு வலிமைக்கு [முன்தொடர்ச்சி]

சிலை பேசிற்று

(மணி)

"உங்களிடம் என்ன பண்பாடு இருக்கின்றது; எந்த வரலாற்றை எடுத்துக் காட்டுகிறீர்கள்" என்றேன்.

"நல்ல கேள்விகேட்டாய்; நீ கேட்டது பற்றி மகிழ்ச்சி; எங்களிடம் உள்ள பண்பாடுகளை, வரலாறுகளைக் கூறுகிறேன், நிதானமாகக் ;கேள்" என்றது.

என் எண்ணம் அது கூறுவதைக் கவனிக்கவேயில்லை. அரைகுறையாகத்தான் காதில் விழுந்தது. எங்கோ, ஏனென்று புரியாமல் சுற்று முற்றும் பார்த்தேன். வெண்ணிலா கிழக்கே தோன்றியது. அது தோன்றுமிடம் ஏதோ தீயினால் பிடிபட்டதுபோல் தோன்றிற்று. நான் மெதுவாக எழுந்தேன்.

"நான் உன்னிடம் பேசிக்கொண்டே இருக்கின்றேனே, நீங்கள் கவனிக்கவேயில்லையா? ஏன் எழுந்து விட்டீர்கள்" என்றது.

"வீட்டிற்குச் செல்ல வேண்டும்; நேரமாகிவிட்டது; கிழக்கே சந்திரன் கூடத் தோன்றிவிட்டது" என்றேன்.

"நாளை வருகிறீர்களா' என்றது

"அவசியம் வருகிறேன்" என்று பதிலளித்தேன். "கூடியமட்டும் சிறிது சீக்கிரமாக வந்து விடுங்கள்" என்றது. சரி என்று 'புறப்பட்டு விட்டேன். நேராக வீட்டிற்கு வந்து கைகால் சுத்தம் செய்து கொண்டு உள்ளே சென்றேன்.

என் மனைவி சாப்பிட அழைத்தாள். பண்பாடு, வரலாறு என நானே என்னுள் கூறிக் கொண்டேன் நான் ஒன்றுமே பேசவில்லை.

ஏதோ நான் கோபமாக இருக்கிறேன் என்று எண்ணி என் மனைவி என்னிடம் பேசவில்லை சாய்வு நாற்காலியை வெளியில் போட்டு அதில் படுத்திருந்தேன். அவள் தன் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வந்து சாப்பிட அழைத்தாள்.

இலைபோட்டு காய்கறிகள் எல்லாம் பரிமாறப் பட்டிருந்தன. அதன் முன் சென்று அமர்ந்தேன்.

என்ன, கற்சிலை போல் பேசாது இருக்கிறீர்களே என்று அவள் கேட்டாள். அது வரையில் நானும் பேசாது எங்கெங்கோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தேன் எனத்தோன்றியது.

முற்காலத்தில் பெண்களும், ஆண்களும் நன்றாகவாழ்ந்தார்கள். அமைதியான வாழ்க்கையை ஓரளவு செம்மையாகத்தான் நடத்தினார்கள். ஆனால் இன்றோ வெளி ஆடம்பரங்களும், பயனில்லா நாகரிகத்திலும் இருக்கிறோமே. அதற்கெனச் செலவாகும் பொருளோ அளவில்லை. என்ன வாழ்க்கையோ நம் வாழ்க்கை. பண்பாடு என்பது இப்பொழுது தமிழர் உள்ளங்களிலே காணுகின்றோமா என்றெல்லாம் சிந்தித்த வண்ணமிருந்தேன். எனவே பேச்சில்லை.

அவள் கேட்ட கேள்விக்கு மறுமொழியாக "ஒன்றுமில்லை, ஏதோ சிந்தனை செய்து கொண்டிருந்தேன். அவ்வளவுதான்" என்றேன்.

நான் உணவு கொண்டேன்; அவளும் உண்டாள் இருவரும் நிலா முற்றத்திலே வந்தமர்ந்தோம்.

எங்கோ ஓரிடத்தில் ஆந்தைகளின் அலறல் கேட்டது. பிறகு ஒன்றுமில்லை. ஊர் அமைதியாக இருந்தது.

இரவு கழிந்து பொழுதும் புலர்ந்தது வழக்கம் போல் வேலைக்குப் புறப்பட்டேன். வேலை முடிந்து மாலை வெளிவந்தேன். கற்சிலையின் ஞாபகம் வந்தது. நேரே மலை அடிவாரம் சென்றேன்.

அங்கு சென்றதும் அச்சிலை வணக்கம் கூறியது; நான் வியப்படைந்து நேற்று அமர்ந்த இடத்திலேயே அமர்ந்தேன்.

(வரும்)

அன்பர், பட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி

அ. வ - எ. 223
திரு எம். நடேசன் அவர்கள்
20, முத்துகிருஷ்ணன் தெரு,
சென்னை-1

அ. வ - எ. 224
திரு பி. என். குணவர்த்தனன் அவர்கள்
85, சஞ்சிவிராயன் கோவில் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

அ. வ - எ. 225
திரு நாயர். வேங்கடேசன் அவர்கள்
22. வரதா முத்தையப்பன் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 226
திரு எம், எஸ். ஆண்டாள் அவர்கள்
6, மங்கம்மாள் தெரு,
சென்னை. 1.

அ. வ - எ. 227
திரு எஸ். பாலகிருஷ்ணன் அவர்கள்
1-17, லாலா குட்டி தெரு,
பெரியமெட்டு,
சென்னை-3.

அ. வ - எ. 228
திரு சி. ஏ. குப்புசாமி அவர்கள்
2, தில்லைநாயகம் பிள்ளை தெரு,
செம்பியம், பிரம்பூர், சென்னை- 11.

அ, வ - எ. 229
திரு செ. சுப்பிரமணியன் அவர்கள்
36, நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 230
திரு டி. எஸ். துரைராசன் அவர்கள்
106, காளத்தியப்ப முதலி தெரு,
வேப்பேரி, சென்னை-7.

அ. வ - எ 231
திரு என். பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்
76 தொட்டிக்கலை குமரப்ப மூதலி தெரு,
சூளை, சென்னை-7.

அ. வ - எ, 232
திரு கே. சுப்பிரமணியம் அவர்கள்
4, நெட்ட முத்தியால் கான் மேஸ்திரி சந்து
அயன்புரம், சென்னை-23.

அ. வ - எ. 233
திரு சி. என். ஜானகிராமன் அவர்கள்
17, சுப்பிரமணிய முதலி தெரு,
சென்னை-1.

அ. வ - எ 234
திரு ம. பாலசுப்பிரமணியம் அவர்கள்
16, அருணசல பண்டாரம் தெரு,
புரசைவாக்கம், சென்னை-7

அ. வ - எ. 235
திரு டி. எஸ். வரதன் அவர்கள்
16, மங்கம்மாள் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 236
திரு மு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
10, கிருஷ்ணப்ப நாயக்கன் அக்கிராரம் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 237
திரு டி. வேதாசலம் அவர்கள்
10, வடமலை மேஸ்திரி தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 238
திரு பி. கே. ராமதாஸ் அவர்கள்
3, மங்கபதி நாயகன் தெரு,
சென்னை-2.

அ. வ - எ 239
திரு சி. வி. பார்த்தசாரதி அவர்கள்
1-46, இருளப்பன் தெரு,
சென்னை 1.

அ. வ - எ. 240
திரு ப. வே. சண்முகசுந்தரம் அவர்கள்
50, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 241
திரு வி. சுப்பிரமணியம் அவர்கள்
21, ஐயாமுதலி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2.

அ. வ - எ. 242
திரு இ. சம்பந்தமூர்த்தி நாயகர் அவர்கள்
50, வெங்கடேச பத்தன் தெரு,
குயப்பேட்டை, சென்னை-12.

அ. வ - எ. 243
திரு ம. பெ. கண்ணபிரான் அவர்கள்
1, பார்த்தசாரதி முதலி தெரு,
புரசைவாக்கம், ன்னை-7.

அ. வ - எ. 244
திரு எஸ். அருணசலம் அவர்கள்
16, தங்கசாலைத் தெரு, சென்னை-3.

அ. வ - எ. 245
திரு சி. எஸ். சரவண செட்டி அவர்கள்
48, மெக்னிகல்ஸ் ரோட்,
சேத்துப்பட்டு, சென்னை-10.

அ. வ - எ. 246
திரு வச்சிரவேல் செட்டியார் அவர்கள்
1-46, இருளப்பன் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 247
திரு ஓ. கே. சிவராஜ் அவர்கள்
24. திருப்பள்ளி தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 248
திரு கா. பொ. மாசிலாமணி நாயகர் அவர்கள்
5, தேனும்பேட்டை ராமசாமி முதலி தெரு,
கொண்டிதோப்பு, சென்னை 1.

அ. வ - எ. 249
திரு திரிபுரசுந்தரி அவர்கள்
2-267, தங்கசாலைத் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 250
திரு பி. டி. கோவிந்தராசன் அவர்கள்
13 இப்ராஹீம் சேட் தெரு,
கொண்டிதோப்பு சென்னை-1.

அ. வ - எ. 251
Sri M. R. SRINIVASAN AvL
Draftsman Chief Elec, Engineer's Office,
CENTRAL RAILWAY,
BOMBAY. V. T,

அ. வ - எ. 252
திரு திரிபுராந்தகம் அவர்கள்
3, பாபுராஜா தெரு,
அகரம், பிரம்பூர், சென்னை-11.

அ. வ - எ. 253
திரு சி. பி. மணி அவர்கள்
10-2, ரங்கைய நாயுடு தெரு.
அயன்புரம், சென்னை-23.

அ. வ - எ. 254
திரு லக்ஷ்மிபதி அவர்கள்
36 முத்துகிருஷ்ணன் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 255
திரு டி, எஸ், ஆர் சுக்லா அவர்கள்
15 கேசவ அய்யர் தெரு,
சென்னை-3.

அ. வ - எ. 256
திரு என். பாலசுப்பிரமணியன்
அவர்கள்
2, சண்முகராயன் தெரு.
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

அ. வ - எ. 257
திரு கண்ணம்மாள் அவர்கள்
35, வெங்கையர் தெரு
சென்னை-1

அ. வ - எ- 258
திரு விநாயக சுந்தரமுதலியார்
அவர்கள்
24, ஆண்டியப்ப நாயக்கன் தெரு.
சூளை, சென்னை-7.

அ. வ - எ. 259
திரு டி, டி, பூபதி அவர்கள்
28, சாமி நாயக்கன் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை சென்னை 2.

அ. வ - எ. 260
திரு வி. எம். தெய்வசிகாமணி
அவர்கள்
108, ஆதம் சாயபு தெரு.
இராயபுரம், சென்னை-13.

அ. வ - எ. 261
திரு ஐ. சுப்பிரமணியம் அவர்கள்
32, கந்தப்பிள்ளை தெரு,
பிரம்பூர் சென்னை-11.

அ. வ - எ. 262
திரு ப, சச்சிதாநந்தம் அவர்கள்
467, தங்கசாலைத் தெரு,
சென்னை-3.

அ. வ - எ, 263
திரு ஆர். அங்கமுத்து அவர்கள்
29, அம்மையப்பமுதலி தெரு.
இராயப்பேட்டை, சென்னை-14.

அ. வ - எ. 264
திரு என், சதாநந்தம் அவர்கள்
62, சஞ்சீவி ராயன் கோயில் தெரு,
பழைய வண்ணாரப் பேட்டை,
சென்னை-21

அ. வ - எ. 265
திரு எஸ். நடேச செட்டி அவர்கள்
42, சவரி முத்து தெரு,
மண்ணடி, சென்னை-1

அ, வ - எ 266
திரு. எ து கிரியம்மாள் அவர்கள்
35, வெங்கையர் தெரு.
சென்னை-1.

அ, வ - எ. 267
திரு சி. ஜி. நடராசன் அவர்கள்
61, அங்காளம்மன் கோயில் தெரு,
சூளை, சென்னை-7.

அ. வ-எ 268
திரு பி. தங்கவேல் முதலியார் அவர்கள்
42, ஆடம் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

அ. வ-எ. 269
திரு சி. ஆறுமுக செட்டி அவர்கள்
66, ஆதம் சாயபு தெரு
இராயபுரம், சென்னை-13.

அ. வ-எ 270
திரு சிவசங்கர திருவேடி அவர்கள்
47, ரகுநாயகுலு தெரு,
சென்னை-3.

அ. வ-எ 271
திரு விசாலாக்ஷியம்மாள் அவர்கள்
11, சுந்தரவிநாயகர் கோயில் தெரு,
கொருக்குப் பேட்டை, சென்னை 21.

அ. வ-எ 272
திரு ஆ. சந்திரா அவர்கள்
20, பர்க்கிட் ரோடு,
தியாகராய நகர்,
சென்னை-17.

அ. வ-எ 273
திரு அருணசல நாடார் அவர்கள்
46, ஹாலட் வார்ப்
வால்டேக்ஸ் ரோடு சென்னை-1.

அ. வ-எ 274
திரு பி. பி. இராதாகிருஷ்ணன் அவர்கள்
61, காளத்தியப்ப முதலிதெரு,
சூளை சென்னை-7

அ. வ-எ 275
திரு எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள்
313, வால்டேக்ஸ் ரோடு
சென்னை-3.

அ. வ-எ 276
திரு வே. வடிவேல் அவர்கள்
17-1, நாகப்ப நாயக்கன் தெரு,
கொருக்குப் பேட்டை
சென்னை-21.

அ. வ-எ. 277
திரு எஸ். சோமசுந்தரம் அவர்கள்
6, நல்லண்ண முதலி தெரு,
சென்னை-1.

அ. வ-எ. 278
திரு ஜி. எம் சுப்பிரமணியம் அவர்கள்
16, பிடாரியார் கோயில் தெரு,
சென்னை-1.

அ. வ-எ. 279
திரு இ. கணேச மூர்த்தி அவர்கள்
3, வைக்காகாரன் தெரு,
புரசை, சென்னை 7.

அ. வ-எ. 280
திரு வி. சோமசுந்தரம் அவர்கள்
20, உலகப்ப மேஸ்திரி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை,
சென்னை-2

அ. வ-எ. 281
திரு க. சுப்பராயன் அவர்கள்
2, நல்லண்ண முதலி தெரு,
சென்னை-1

அ. வ-எ 281
திரு சி. கே. கோவிந்தசாமி அவர்கள்
17, சீனுமுதலி தெரு,
சென்னை-1

அ. வ-எ. 282
திரு பி. வி. கோவிந்தசாமி அவர்கள்
1-16, முனியப்ப முதலி தெரு.
கொண்டி தோப்பு,
சென்னை-1

சமயப் பகுதி — அருள் வலிமைக்கு

திருவதிகையில் பெரு விழா

— ஆடலரசு —

குருகுல அன்னை, காட்டரண்பாக்கம் திரு. வரதா ரெட்டியார் அவர்களின் வீட்டரசியார் திருமதி ஜெயலக்ஷ்மி அம்மையார் அவர்கள் மேற்கொண்ட 'திலகவதியார் திருத்தொண்டு' பற்றி முன்னரே முல்லைக் கொடியில் எழுதப்பட்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் தக்க சில தாய்மார்கள், பணியாளர்களுடன் திருவதிகையில் தங்கி, ஐம்பது நாட்கள் காலையும் மாலையும் திருக்கோயிலை விளக்கி நீர்தெளித்து, கோலமிடச் செய்து, ஆயிரமாயிரம் திரு விளக்குகளை ஏற்றி ஆயிரமாயிரம் பச்சிலைகளும் மலர்களும் வேளைக்கொரு வகையாகத் தூவி அருச்சனை செய்வித்துத் திருமுறைப் பாடல்களைத் தாமே ஓதிக் கொண்டு வந்தார்கள். இடையிடையே சமய விரிவுரைகளையும் தக்கவர்களைக் கொண்டு செய்வித்தார்கள் 50வது நாளாகிய 10-1-57 வியாழக்கிழமையன்று தொண்டின் நிறைவு நாளாகையினால் திருவீரட்டானம் பெருமானுக்கும், பெரிய நாயகி அம்மைக்கும் சிறப்பான திருமுழுக்குக்கும் சந்தனக் காப்பு முதலியவற்றிற்கும் விடையூர்தியில் அம்மையப்பர் திருவுலாக் காட்சிக்கும் சமய விரிவுரைகட்கும் ஏற்பாடு செய்தார்கள்.

அன்று மாலையில் நடைபெற்ற சமயக் கூட்டத்திற்கு வடலூர் சன்மார்க்க குருகுலத் தலைவர் திரு ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாம்பாக்கம் குருகுலத்தலைவர் ஆசிரியர் இளவழகனார் அவர்கள் 'சிவநெறி' என்பது பற்றியும், ஷி சன்மார்க்க குருகுலபாடசாலைத் தலைமை ஆசிரியர் அவர்கள் 'அருட்பணி' என்பது பற்றியும் விரிவுரை ஆற்றினார்கள்.

அதே கூட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு அம்மையார் அவர்களின் ஐம்பது நாள் நோன்பைப் பாராட்டி மாம்பாக்கம் குருகுலச் சார்பிலும் வடலூர் விசாலாட்சி அம்மையார் தவச்சாலையின் சார்பிலும் வாழ்த்தியல் பாராட்டுரைகள் படித்துக் கொடுக்கப்பட்டன.

கூட்டத்தலைவர் அவர்கள் சமய வாழ்க்கையின் முதன்மை, சமயத்துறையில் தாய்மார்கள் பங்கு, பண்டைய தாய்மார்கள் செய்த சமயத் தொண்டுகள், இக்காலத்தில் சமயமுள்ள நிலை, தாய்மார்கள் கடமை முதலியவற்றைப் பற்றி யெல்லாம் முன்னுரையிலும் பின்னுரையிலும் விளக்கமாக எடுத்துச் சொல்லி, வழிபாட்டுகிற முறையில் நம் அம்மையார் அவர்கள் மேற்கொண்ட நோன்பு பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டி 'வழிபாட்டரசி' என அம்மையாருக்குப் பட்டம் வழங்கினார்கள்.

பிறகு நம் குருகுலத்தின் செயற்குழுத் தலைவர் திரு நா. சங்கரன் M. A. L. T. அவர்கள் (சென்னை நகர மன்றத் துணை ஆணையாளர்) அம்மையாரின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லிப் பாராட்டித் திருவள்ளுவர் திருவுருவப்படமும், 'வழிபாட்டரசி' எனப் பட்டம் வழங்கியதற்கு அடையாளமாக ஒரு வெள்ளிப் பட்டயமும் (பொன் வண்ணம் ஏற்றப் பட்டது) வழங்கினார்கள்.

பின், குருகுலத்தாயார் சிவத்திரு. வள்ளியம்மையார் அவர்கள் எடுத்துக் கொடுக்க, திரு. வரதா ரெட்டியார் தம்பதிகளுக்குக் குருகுலச் சின்னம் அமைந்த 'சிறப்புப் பட்டு மேலாடை' களை முறையே திரு. சங்கரன் அவர்களும், திரு. தேவகி அம்மையும் அணிவித்தார்கள்.

அடுத்துக் குருகுல அமைப்புச் செயலாளர் அவர்கள் தாம் இயற்றிய 'வாழ்த்தியல் பாராட்டுரை' ஒன்றைப் படித்துப் பொன்னரி மாலையிட்டு வழங்கினார்கள். அதில், பாராட்டுக்குரிய தம்பதிகள் இருவரும் செய்து வரும் பற்பல பணிகள் பற்றியும், குருகுலத்துக்கும் அவர்களுக்கும் முதன் முதல் தொடர்பு ஏற்பட்டது முதல் இதுவரை அத்தொடர்பு எந்த அளவுக்கு வளர்ந்து நன்மை பயந்திருக்கிறது என்றும் நூற்றிரண்டு அடியுடைய அகவற் பாடலால் நன்கு விளக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து ஆசிரியர் அவர்கள் 'சிவநெறி' என்பது பற்றி விரிவுரை செய்து, அந்நெறிச் செல்வார்க்கு உதவுகின்ற திருநீற்றுப்பை, அம்பலவாணர் திருவுருவப்படம் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கின் தொகுப்பு நூல் இவைகளை வழங்கினார்கள்.

உரையுடன் கூடிய திருவதிகைப் பதிக நூல் (கூற்றாயினவாறு......எனத் தொடங்கும் அப்பரடிகளின் முதற் திருப்பதிகம்) அம்மையார்தமது நோன்பின் அடையாளமாக அச்சிட்டு விழாவில் வெளியிடுவித்தார்கள்.

கூட்டம் இரவு 10மணி அளவில் மிகவும் சிறப்பாக முடிந்தது.

ரெட்டியார் தம்பதிகள் சார்பில் திருவதிகை திரு, சண்முகசுந்தரம் அவர்களும் ஊரார் சார்பில் திரு. கோவிந்த நாயுடு அவர்களும் நன்றி கூறினார்கள்,

திருமுழுக்கு, திருவீதி உலா, பாராயணம், சமயவிரிவுரை, அடியார்களை வாழ்த்துதல் முதலிய பல்வேறு அமைப்புகளுடன் எங்கும் நடைபெறாத வகையில் நடைபேற்ற இந்நிகழ்ச்சிகளைப் 'பெருவிழா' என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! 'பெருவிழா' என்று சொல்லப்படுவனவற்றுள், பலவற்றிற்கு இத்தகைய சிறப்புகளும் உணர்ச்சிதரும் மாட்சிகளும் இல்லையே!

* * * * *

பணிப் பகுதி — உணர்வு வலிமைக்கு [முன் தொடர்ச்சி]

குருகுலத்தின் பணித்திட்டம்

(ஆசிரியர்)

திருக்குறள் செயல்முக அமைப்பு

'தவம்' என்னும் அதிகாரப் பகுதியில், தவம் புரிவோர்க்குக் குடில்கள் கோலி, அவர் தங்கித் தவம் புரியக் காண்டல்.

'உழவு'. என்பதும் ஓர் அதிகாரம்; அதற்கு, நல்ல பயிர் முறைகளுக்கு எடுத்துக் காட்டான பயிர்ப் பண்ணை வைத்து நடத்துதல்.

சில அதிகாரங்கள் இங்ஙனம் உருவமைந்த செய்கைகளுக்கு அமைவாய் இராமல், குணம் கலை முதலிய நிலைகளில் நின்று உணர்வால் உணர்ந்தொழுகுதற் குரியனவாய் இருக்கும். 'நன்வலியுறுத்தல்' 'ஒழுக்க முடைமை' 'தெளிந்து தெளிதல்' 'நெஞ்சொடு கிளத்தல்' முதலிய அதிகாரங்கள் இவை போல்வன. இவ்வதிகாரங்களுக்குரிய நிலப் பகுதிகளில், இவற்றின் கருத்துக்களை எங்கும் பரவச் செய்தற்குரிய முயற்சிகள் நடை பெறலாம். அவ்வவற்றிற்குரிய அலுவலகங்கள் அமைத்து, அவ்வக் குணச் சிறப்பமைந்த நற்றொண்டரை அங்குத் தங்கச் செய்து, உரிய வெளியீடுகள், அட்டைப் படங்கள், அவ்வக் குணப்படி நடந்தோர் நடவாதவர் வரலாற்றுச் சான்றுகள், உருவ அமைப்புகள் முதலியன கண்டு, பரப்புந் தொண்டுகள் நிகழ்த்துதல்.

செயல்முக அமைப்புகளை நினைந்து பார்ப்பவர்க்கு எவ்வளவோ செய்வகைகள் தோன்றும் ஒவ்வோர் அதிகாரத்தின் நிலப் பகுதியும் அவ்வவ்வதிகாரத்திற்குரிய காட்சிச் சாலையாகவும் கருத்தியக்கக் களனாகவும் விளங்கச் செய்யலாம்.

குருகுலத்தின் இச் செயலமைப்பு, சுற்றுப் பயணம் செய்யும் உலக அறிஞர்களின் கண்ணும் கருத்தும் கவரும் திருக்குறட் சாலையாய், சான்றாண்மை இயக்கச் செயலகமாய் வாழ்க்கைத் திரு விளைக்கும் வல்லமைச் சூழலாய், நல்லோர் மன மொழி மெய்களின் செயல்முகப் பண்ணையாய், உலகுக்குக் கலங்கரை விளக்கென நின்று நாளும் நலம் பயத்தல் நல்லது.

தேவையான நிலப்பகுதிகளை ஆசிரியர் திரு. இளவழகனார் அவர்கள் அமைத்து வருகின்றார். அதிகாரப் பிரிப்பும் செயலும் இனி நடைபெற வேண்டும். தொண்டுணர்வுடைய பெரு மக்கள் ஆசிரியர் பணிகளிற் கலந்து கொள்ள விரும்பினால், திருக்குறள் அதிகாரங்களைத் தம் பொறுப்பிற் செயல் செய்ய முன்வரலாம். அதிகாரங்களை அவரவர் விருப்பத்துக்கு ஏற்றபடி தெரிந்தெடுத்துக் கொள்ளலாம் செலவும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது ஒருவர் தெரிந்தெடுத்துவிட்ட அதிகாரத்தை மற்றொருவரும் மேற்கொள்ள இயலாது. பொதுவாக, ஒருவர் ஓர் அதிகாரம் ஏற்கலாம்; விரும்பினால், சில அதிகாரங்களும் ஏற்றுக்கொள்ளலாம். அவரவர்க்குப் அத்தொண்டு, பெயரும் பீடும் விளங்க நாட்டில் நல் அடையாளமாகத் திகழும்.

* * * *

Phone. 55034 Tel. Enlaay

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.

53. கிடங்குத் தெரு. சென்னை. 1.